**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

**அசல் வழக்கு எண். 69/2017**

2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16ம் நாள் திங்கள் கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 செல்வி.S.கௌசல்யா என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | **மதியழகன்** | **தொழில் :** | விவசாயம் |
| **தந்தை பெயர் :** | **முருகையன்** | **சமயம் :** | – |
| **ஊர் :** | செம்பாளூர் | **வயது** | 59 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | – |

**16.02.2026**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 1ம் வாதி ஆவேன்,2ம் வாதி என் மூத்த சகோதரி. நான் எனது முதன்மை சாட்சியத்தை 2ம் வாதிக்கு சார்பாகவும் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு ஆவணங்களாக கடந்த 25.02.2014 ல் எனது அத்தை ராஜம்மாள் எழுதி வைத்த உயில் ஆவணம் அசல் **வா.சா.ஆ–1** ஆக குறியிடுகிறேன். (**பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபனையுடன் குறியிடப்படுகிறது.**) 18.03.2014 ல் ராஜம்மாளின் இறப்பு சான்று அசல் **வா.சா.ஆ–2** ஆக குறியிடுகிறேன். 28.03.2017 ல் கணினி சிட்டா **வா.சா.ஆ–3** ஆக குறியிடுகிறேன். 02.12.2016 ல் பட்டுக்கோட்டை கோட்டாட்சியர் கொடுத்த உத்தரவு அசல் **வா.சா.ஆ–4** ஆக குறியிடுகிறேன். 24.11.2020 ல் நான் எனது சகோதரிக்கு எழுதி வைத்த கணினி இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் **வா.சா.ஆ–5** ஆக குறியிடுகிறேன். 03.05.2021 ல் எனது சகோதரி 2ம் வாதி அமிர்தலிங்கம் எழுதிவைத்த கணினி பாக பாத்திய விடுதலை பத்திரம்

**வா.சா.ஆ–6** ஆக குறியிடுகிறேன். 13.10.2025 தேதியிட்ட கணினி சிட்டா **வா.சா.ஆ–7** ஆக குறியிடுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged* ***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.